செய்தி – மக்கள் தொடர்புத்துறை

# மக்கள் சாசனம்

©

தமிழ்நாடு அரசு

2019

**செய்தி மக்கள் தொடர்புத் துறை**
**முகவரி மற்றும் தொலைபேசி எண்கள்**


**திரு.கடம்பூர் ராஜு**
மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை – 600 009.
☏ அலுவலகம் : 044 – 25671512

**திரு.ஆ. கார்த்திக், இ.ஆ.ப.,**
அரசு செயலாளர் (மு.கூ.பொ)
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.
☏அலுவலகம் : 044 – 25672887

**முனைவர். பொ.சங்கர், இ.ஆ.ப.,**
இயக்குநர்
செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.
☏அலுவலகம்: 044 – 25671300


தமிழ்நாடு அரசு இணைய தள முகவரி : www.tn.gov.in
செய்தி மக்கள் தொடர்புத் துறை இணைய தள முகவரி : www.tndipr.gov.in

# செய்தி–மக்கள் தொடர்புத் துறையின்

# குறிக்கோள்கள்

- அரசின் குறிக்கோள்களையும், கோட்பாடுகளையும் மக்கள் முழுமையாக உணர்ந்து கொள்ளச் செய்தல்.
- அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களை, மக்களுக்கு, அவர்கள் இருக்கும் இடங்களுக்கே எடுத்துச் செல்லுதல், மேலும் அரசுத் திட்டங்கள், செயல்பாடு குறித்து பொது மக்களின் உணர்வுகளை அரசுக்கு எடுத்துச் செல்லுதல், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளிவரும் விமர்சனங்கள், செய்திகள் உடனுக்குடன் அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுதல்.
- பத்திரிகையாளர்கள் நலன்காக்கும் பலவகை நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- மாவட்டங்களில் செய்தியாளர் பயணங்கள்/செய்தியாளர் சந்திப்புகள் ஏற்பாடு செய்து, அரசு நலத் திட்ட உதவிகளை பொதுமக்கள் அறியும் வகையில், செய்திகளாகவும்–புகைப்படங்களாகவும் நாளேடுகளில் வெளியிடச் செய்தல்.
- திரைப்படம் மற்றும் வீடியோ மூலமாகவும், பிற மக்கள் தொடர்பு சாதனங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்த விவரங்களை உடனுக்குடன் மக்களிடையே பரவிடச் செய்தல்.
- அரசின் நலத் திட்டங்கள் குறித்த விவரங்களைப் பொதுமக்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புற மக்களுக்கு எடுத்துச் சென்று, அவைகள் குறித்து விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்.
- அவ்வப்பொழுது நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகளின் வாயிலாகவும் பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் வாயிலாகவும் அரசின் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றைப் பொதுமக்களிடம் பரவிடச் செய்தல்.
- அரசின் பல்வேறு துறைகள், அரசுசார் நிறுவனங்கள் – ஆகியவற்றின் திட்டங்கள் குறித்த விளம்பரங்களை வெளியிடும் மையமாக செயல்படுதல்.
- மக்களுக்குப் பயன்தரத்தக்க வகையில், அரசின் திட்டங்கள் குறித்த செய்திகளை விளக்கிடும் வண்ணம் தமிழரசு இதழ்களை அச்சிட்டு வெளியிடுதல்.
- புகழ்வாய்ந்த தலைவர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகளைச் சிறப்பித்தல், அவர்தம் நினைவினைப் போற்றிடும் வகையில் நினைவகங்கள்/சிலைகள் ஏற்படுத்தி பராமரித்தல் மற்றும் விழாக்கள் ஏற்பாடு செய்தல்.
- திரைப்படத் தொழில் வளர்ந்திட, குறைந்த செலவிலான சிறந்த திரைப்படங்களுக்கு மானியம் அளித்தல் மற்றும் சிறந்த திரைக் கலைஞர்களுக்குப் பரிசளித்து ஊக்குவித்தல்.

# 1. வள்ளுவர் கோட்டம், சென்னை

| அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் | விண்ணப்பபிக்கப்பட வேண்டிய அலுவலர் | அனுமதி வழங்கும் அலுவலர் | வாடகை | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. அரசு நிகழ்ச்சிகள், இலக்கிய நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், கவியரங்குகள், அரசு மற்றும் தனியார் விழாக்கள் / அரசின் ஒப்புதல் பெற்ற ஏனைய நிகழ்ச்சிகள் | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வள்ளுவர் கோட்டம், சென்னை– 34. அலுவலகம்: ☏044–28172177 கைபேசி: 94980 42416 | இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600 009. அலுவலகம்: ☏044–25671300<br><br>இணை இயக்குநர் (நினைவகங்கள்) வழியாக அலுவலகம்: ☏044–25676226 | நாள் ஒன்றுக்கு ரூ.30,000/– (முழு நாள்) மின்கட்டண வைப்புத்தொகை ரூ.8,000/– | செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600009. அலுவலகம்: ☏044–25672887 |
| 2. பொருட்காட்சிகள்/ வணிக ரீதியான நிகழ்ச்சிகள் | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வள்ளுவர் கோட்டம், சென்னை– 34. அலுவலகம்: ☏044–28172177 கைபேசி: 94980 42416 | இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்செயலகம், சென்னை 600 009. அலுவலகம்: ☏044–25671300<br><br>இணை இயக்குநர் (கள விளம்பரம்) வழியாக அலுவலகம்: ☏044–25671132 | பொருட்காட்சிகள்/ வணிக ரீதியான நிகழ்ச்சிகள் நாள் ஒன்றுக்கு ரூ.60,000/– மின்கட்டண வைப்புத்தொகை ரூ.8,000/–<br><br>முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நுழைவுக் கட்டணம் இல்லையெனில் ரூ.7,500/–மும் நுழைவுக்கட்டணம் வசூலித்தால் ரூ.12,000/–மும் செலுத்த வேண்டும். | செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600009. அலுவலகம்: ☏044–25672887 |

- ஒதுக்கீடு அரங்கத்திற்கு மட்டுமே செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்படும். மற்ற ஏற்பாடுகளை நிகழ்ச்சி அமைப்பாளர்களே செய்து கொள்ள வேண்டும் (ஜெனரேட்டர் வசதி, மின் அலங்காரம், நாற்காலிகள், அலங்காரங்கள் உட்பட)
- வள்ளுவர் கோட்டம் அனைத்து நாட்களும் திறந்திருக்கும். பொதுமக்கள் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிடலாம்.
- நுழைவுச்சீட்டுக் கட்டணம் : பெரியவர்களுக்கு ரூ.10/– சிறியவர்களுக்கு ரூ.5/–
- தனியார் நடத்தும் பொருட்காட்சி மற்றும் நிகழ்ச்சிகளின் போது பொதுமக்களிடம் நுழைவுச்சீட்டுக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.

## 2. காந்தி மண்டபம் (திறந்தவெளி அரங்கம்), சென்னை

| வ. எண் | அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் | வாடகை | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | அனுமதி வழங்கும் அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|---|---|
| 1. | பல்கலைக் கழக விழாக்கள் – பட்டமளிப்பு மற்றும் பிற நிகழ்ச்சிகள் | நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.10,000/–, (GST-18%) ரூ.5,000/– (சுத்தம் செய்தலுக்கான கட்டணம் மற்றும் மின்கட்டண வைப்புத் தொகை ரூ.2,500/–) | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இராஜாஜி மண்டபம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை 600 002<br><br>அலுவலகம்: ☏044–25333635<br>கைபேசி: 94980 42415 | இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம் சென்னை 600 009<br><br>அலுவலகம்: ☏044–25671300<br><br>இணை இயக்குநர் (நினைவகங்கள்) வழியாக<br><br>அலுவலகம்: ☏044–25676226 | செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, தலைமைச் செயலகம் சென்னை – 600 009<br><br>அலுவலகம்: ☏044 –25672887 |
| 2. | கல்லூரி நிகழ்ச்சிகள், அரிமா சங்கம், சுழற் சங்கம், ஆன்மீக நிகழ்ச்சிகள் (மதச்சார்பற்றவை) | நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.10,000/–, (GST-18%) ரூ.5,000/– (சுத்தம் செய்தலுக்கான கட்டணம் மற்றும் மின்கட்டண வைப்புத் தொகை ரூ.2,500/–) | | | |
| 3. | பள்ளிகள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் நடத்தும் நிகழ்ச்சிகள் | நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.6,000/– (GST-18%) ரூ.4,000/– (சுத்தம் செய்தலுக்கான கட்டணம் மற்றும் மின்கட்டண வைப்புத் தொகை ரூ.2,500/–) | | | |
| 4. | காந்திய நிறுவனங்களுக்கான காந்திய கல்விக்கான இளைஞர் அமைப்பு | நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2,000/–, (GST-18%) ரூ.2,000/– (சுத்தம் செய்தலுக்கான கட்டணம் மற்றும் மின்கட்டண வைப்புத் தொகை ரூ.2,000/–) | | | |

## ஒதுக்கீடு செய்வதற்கான நிபந்தனைகள்

- விண்ணப்பம் மீதான நடவடிக்கை – அரசுத்துறைகள் நீங்கலாக மற்றவர்கள் காவல்துறை ஆணையரிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்று இவ்வலுவலகத்தில் அளித்த பின்னர் மண்டப ஒதுக்கீடு தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- இட அனுமதி மட்டும் செய்தித்துறையால் அளிக்கப்படுகிறது.
- காவல்துறை மற்றும் பிற துறைகளின் அனுமதியினை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களே பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
- காந்திமண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புல்தரைகளுக்கு எந்தவித சேதமும் ஏற்படுத்தக் கூடாது.
- காந்திமண்டப வளாகத்தினுள் தூய்மையை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.
- காந்திமண்டப வளாகத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தக் கூடாது. பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக காகிதப் பொருட்கள் மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்விதியை மீறி பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவோரிடம் ரூ.10,000/– அபராதமாக வசூலிக்கப்படும்.

# 3. மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், காந்தி மண்டப வளாகம், சென்னை

| **அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள்** | **விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர்** | **அனுமதி வழங்கும் அலுவலர்** | **வாடகை** | **மேல் முறையீட்டு அலுவலர்** |
|---|---|---|---|---|
| நிகழ்ச்சிகள் மட்டும் நடத்த அனுமதி | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இராஜாஜி மண்டபம் ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை 600 002<br><br>அலுவலகம்: ☏044–25333635<br>கைபேசி: 94980 42415 | இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம் சென்னை–600 009<br>அலுவலகம்: ☏044–25671300<br><br>இணை இயக்குநர் (நினைவகங்கள்) வழியாக<br><br>அலுவலகம்: ☏044–25676226 | நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.5,000/–, (GST-18%)<br><br>ரூ.2,000/– (சுத்தம் செய்தலுக்கான கட்டணம் மற்றும் மின்கட்டண வைப்புத் தொகை ரூ.2,000/–) | செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, தலைமைச் செயலகம் சென்னை–600 009<br><br>அலுவலகம்: ☏044–25672887 |

- விண்ணப்பம் மீதான நடவடிக்கை அரசுத்துறைகள் நீங்கலாக மற்றவர்கள் காவல் துறை ஆணையரிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்று இராஜாஜி மண்டப அலுவலகத்தில் அளித்த பிறகு தான் காந்தி மண்டபம் ஒதுக்கீடு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- இட அனுமதி மட்டும் செய்தித் துறையால் அளிக்கப்படுகிறது.
- காவல் துறை, பிற துறைகளின் அனுமதியினை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களே பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
- காந்தி மண்டப வளாகத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகப்படுத்தக் கூடாது
- காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புல்தரைகளுக்கு எந்தவித சேதமும் ஏற்படுத்தக் கூடாது.
- காந்தி மண்டப வளாகத்தினுள் தூய்மையை கடைபிடிக்க வேண்டும்.
- மூதறிஞர் இராஜாஜி நினைவாலயத்தில் நிகழ்ச்சி நடத்த இடம் மட்டுமே செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அளிக்கப்படும். நிகழ்ச்சி நடத்த தேவையான நாற்காலி, மின் ஆக்கி முதலியன நிகழ்ச்சி நடத்துபவர் ஏற்பாடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

## 4. காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் மணிமண்டபம், சென்னை

| அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | அனுமதி வழங்கும் அலுவலர் | வாடகை | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|---|
| அரசு துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்பெறும் கருத்தரங்கம் மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகள் | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இராஜாஜி மண்டபம் ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை 600 002<br><br>அலுவலகம்:<br>☏044–25333635<br>கைபேசி:<br>94980 42415 | இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம் சென்னை–600 009<br><br>அலுவலகம்:<br>☏044–25671300<br><br>இணை இயக்குநர் (நினைவகங்கள்) வழியாக<br><br>அலுவலகம்:<br>☏044–25676226 | நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.3,000/– (GST-18%) மின்கட்டண வைப்புத் தொகை ரூ.1000/– மணிமண்டபத்தின் பொருட்கள் சேதாரம் தவிர்க்கும் பொருட்டு முன் வைப்புத் தொகை ரூ.1,000/– | செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, தலைமைச் செயலகம் சென்னை–600 009<br><br>அலுவலகம்:<br>☏044–25672887 |

- மின் நுகர்வுக்காக கட்டணத்தை நிகழ்ச்சியாளர்களே கட்ட வேண்டும்.
- நிகழ்ச்சியாளர்கள் இருக்கின்ற குடிநீர் மற்றும் இருக்கை வசதிகளைத் தான் பயன்படுத்த வேண்டும். கூடுதலாக தேவைப்படுபவைகளை நிகழ்ச்சியாளர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
- நிகழ்ச்சியாளர்கள் ஒதுக்கீடு அளிக்கப்பட்ட காரணத்திற்காகத்தான் மண்டபத்தைப் பயன்படுத்த வேண்டும். மற்ற வளாகத்தின் புனிதத்தன்மையைக் கெடுக்கும் வகையிலான இசையோ அல்லது மற்ற செயல்களையோ நிகழ்ச்சியாளர்கள் அனுமதிக்கக் கூடாது.
- தடுப்புகள் போன்ற ஏற்பாடுகள் முன் அனுமதியில்லாமல் செய்யக் கூடாது.
- பொதுமக்கள் நிகழ்ச்சிக்கு வருவதற்கு எந்த ஒரு கட்டுப்பாடும் இருக்கக் கூடாது.
- அனுமதி கட்டணம் வசூலித்தல் கூடாது.
- வேறு ஏதாவது அரசு நிகழ்ச்சிகள் எதிர்பாராமல் ஏற்படின் கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் மணிமண்டப ஒதுக்கீடு ரத்து செய்யப்படும்.
- மத அமைப்புகள் நிகழ்ச்சி நடத்த அனுமதி கோருமுன் சென்னை நகர காவல்துறை ஆணையரின் அனுமதி பெற வேண்டும்.
- தீ மற்றும் விபத்துக்கள் நடக்காத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

# 5. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், சென்னை

| அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | அனுமதி வழங்கும் அலுவலர் | வாடகை | மேல்முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|---|
| பாரதியார் பற்றிய கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்ச்சிகள், கவியரங்குகள், அரசு நிகழ்ச்சிகள், நூல் வெளியீட்டு விழா மற்றும் அரசின் ஒப்புதல் பெற்ற ஏனைய நிகழ்ச்சிகள் | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாநில செய்தி நிலையம், கலைவாணர் அரங்க வளாகம், வாலாஜா சாலை, சென்னை–600 002<br><br>அலுவலகம்:<br>044– 25333024 | இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம் சென்னை–600 009<br>அலுவலகம் :<br>044–25671300<br><br>இணைஇயக்குநர் (நினைவகங்கள்) வழியாக<br>அலுவலகம் :<br>044–25676226 | நாள் ஒன்றுக்கு ரூ.10,000/–<br><br>இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு ரூ.5,000/–<br><br>மின் கட்டணம் ரூ.500/– (முதல் 20 யூனிட்களுக்கு மட்டும்)<br><br>கூடுதல் மின் உபயோகத்திற்கு ரூ.10/– யூனிட் | செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச் செயலகம் சென்னை–600 009<br><br>அலுவலகம் :<br>044 –25672887 |

மேலும், கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, அரசியல்/மத சார்பில்லாத கவியரங்கம் / கருத்தரங்கம் மற்றும் பாரதியார் சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள் ஆகியவற்றை மட்டும் நடத்த அனுமதி அளிக்கவும், இது தவிர அரசின் அனுமதி பெற்ற பின்னரே பிற நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி அளிக்கவும் அரசு ஆணையிடுகிறது.

1. அரங்கத்திற்கு வாடகையாக செலுத்தப்படும் கட்டணம் "செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மகாகவி பாரதியார் இல்லம், சென்னை – 600 005" என்கின்ற பெயருக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக சென்னையில் மாற்றத்தக்க வகையில் ஒதுக்கீடு செய்யும் போது வழங்க வேண்டும்.
2. தனியார் விழாக்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு, அரங்க ஒதுக்கீட்டுக்கான விண்ணப்பம் 10 நாட்களுக்கு முன்னதாக அளிக்கப்பட வேண்டும். அரசு விழாக்களுக்கு இவ்விதிமுறை பொருந்தாது.
3. முழு வாடகைத் தொகை செலுத்திய பிறகு தான் ஒதுக்கீடு உறுதி செய்யப்படும்.
4. இவ்வொதுக்கீடு தற்காலிகமானது.
5. ஒதுக்கீட்டினை ரத்து செய்ய அரசிற்கு அதிகாரம் உண்டு.
6. நிகழ்ச்சிகளை அரசே ரத்து செய்தால் செலுத்திய வாடகை கட்டணம் பிடித்தம் இல்லாமல் அரசின் விதிமுறைப்படி திருப்பி அளிக்கப்படும்.
7. ஒதுக்கீடு தேதிக்கு 20 தினங்களுக்கு முன்னால் ரத்து செய்தால் வாடகை தொகையிலிருந்து ரத்துக் கட்டணம் 25சதவீதம் பிடித்தம் செய்யப்படும்.

8. ஒதுக்கீடு தேதிக்கு 10 தினங்களுக்கு மேல் 20 தினங்களுக்குள் ரத்து செய்தால் 50 சதவீதம் பிடித்தம் செய்யப்படும்.

9. ஒதுக்கீடு தேதிக்கு மூன்று தினங்களுக்கு மேல் 10 தினங்களுக்குள் ரத்து செய்தால் 75 சதவீதம் பிடித்தம் செய்யப்படும்.

10. ஒதுக்கீடு தேதிக்கு 3 தினங்களுக்குள் ரத்து செய்தால் 90 சதவீதம் பிடித்தம் செய்யப்படும்.

11. ஒதுக்கீடு கோரிய நிகழ்ச்சி மட்டுமே நடத்த அனுமதிக்கப்படும்.

12. அரங்கத்தில் தூய்மையை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

13. நிகழ்ச்சி நடத்துபவர்கள் அரங்கத்தில் உள்ள பொருட்களுக்கு (பல்ப், நாற்காலிகள், பிற பொருட்கள்) சேதமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நிகழ்ச்சி நடத்துபவர்கள் முன் வைப்புத் தொகையாக ரூ.5,000/– கூடுதலாக செலுத்த வேண்டும். முன் வைப்புத் தொகையாக பெறப்படும் தொகையில், நிகழ்ச்சி முடிந்த பின், மின் கட்டணம் போக, தொகை சேதாரம் ஏதும் இல்லையெனில், நிகழ்ச்சி நடத்துபவருக்கு திருப்பி அளிக்கப்படும்.

# 6. கலைவாணர் அரங்கம்

| அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | அனுமதி வழங்கும் அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|
| அரசு விழாக்கள், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா, பள்ளி ஆண்டு விழா, கலை மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், தேசிய/மாநில அளவிலான தொழில்சார் மாநாடுகள், சென்னையில் செயல்படும் தூதரகங்கள் நடத்தும் கொள்கை குறித்த கூட்டம், தேசிய பன்னாட்டு நிறுவனங்கள்/குழுமம் நடத்தும் ஆண்டு பொதுக் கூட்டங்கள், பிரசித்தி பெற்ற கல்வி அறிவாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் நடத்தும் விரிவுரை நிகழ்ச்சிகள் மற்றும் அரசால் அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கலைவாணர் அரங்கம், சென்னை–600 002 ☏044–25330333 கைபேசி: 9498042417 | இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 ☏044–25671300 இணை இயக்குநர் (நினைவகங்கள்) வழியாக ☏044–25676226 | செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை, சென்னை–600 009 ☏044–25672887 |

## கட்டண விவரம்

### அ. கலையரங்கம்

| அரங்க விவரம் | இருக்கைகள் விவரம் | ஒதுக்கீட்டு நேரம் | வாடகை கட்டணம் (குளிர்பதன கட்டணம் உட்பட்டது) | மின் கட்டணம் | மின் கட்டண வைப்புத்தொகை (அனைத்து நிகழ்ச்சிகளுக்கும்) |
|---|---|---|---|---|---|
| கலையரங்கம் | 1050 | காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | ரூ.3,65,000/– | ரூ.60,000/– | ரூ.60,000/– |
| | | காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை | ரூ.1,00,000/– | ரூ.20,000/– | ரூ.20,000/– |
| | | மதியம் 02.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை | ரூ.1,00,000/– | ரூ.20,000/– | ரூ.20,000/– |
| | | மாலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை | ரூ.1,00,000/– | ரூ.20,000/– | ரூ.20,000/– |

- கட்டண விலக்கு பெற்ற அரசு நிகழ்ச்சிகளுக்கு 50% கட்டணச் சலுகை வழங்கப்படும்.
- மின் விநியோகத்திற்கு ஏற்ப வர்த்தக மின் கட்டணம் வசூலிக்கப்படும்.
- அரசாணை (நிலை) எண் 140, செய்தி மற்றும் சுற்றுலா (நினைவகங்கள் மற்றும் அரங்கங்கள்), நாள் 31.05.1994–ல் ஆணையிட்டுள்ளவாறு, கலைத்தொழில் சாரா நாடகக் குழுக்கள் (Amateur Drama Troupe), நாடகக் குழுக்கள் (Theatre groups) மற்றும் சபாக்கள் (Sabhas) ஆகியவற்றிக்கு வாடகையில் 50 சதவீதம் சலுகை அளிக்கப்படும்.

(சேவை வரிகள் மற்றும் பராமரிப்பு செலவுகள் தனி)

**ஆ. பல்வகை அரங்கு**

| அரங்க விவரம் | இருக்கைகள் விவரம் | ஒதுக்கீட்டு நேரம் | வாடகை கட்டணம் (குளிர்பதன கட்டணம் உட்பட்டது) | மின் கட்டணம் | மின் கட்டண வைப்புத்தொகை (அனைத்து நிகழ்ச்சிகளுக்கும்) |
|---|---|---|---|---|---|
| பல்வகை அரங்கு | 1000 | காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | ரூ.1,75,000/– | ரூ.50,000/– | ரூ.50,000/– |
| பல்வகை அரங்கு | 500 | காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | ரூ.87,500/– | ரூ.25,000/– | ரூ.25,000/– |
| கட்டண விலக்கு பெற்ற அரசு நிகழ்ச்சிகளுக்கு 50% கட்டணச் சலுகை வழங்கப்படும் மற்றும் மின் விநியோகத்திற்கு ஏற்ப வர்த்தக மின் கட்டணம் வசூலிக்கப்படும் | | | | | |
| (சேவை வரிகள் மற்றும் பராமரிப்பு செலவுகள் தனி) | | | | | |

**இ. கூட்டரங்கம்**

| அரங்க விவரம் | இருக்கைகள் விவரம் | ஒதுக்கீட்டு நேரம் | வாடகை கட்டணம் | மின் கட்டணம் |
|---|---|---|---|---|
| கூட்டரங்கம் (Conference Hall) | இருக்கைகளை நிகழ்ச்சி நடத்துபவரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். | காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | ரூ.4,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.500/–) | ரூ.3,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.300/–) |
| | | காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை | ரூ.2,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.500/–) | ரூ.1,500/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.300/–) |
| | | மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | ரூ.2,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.500/–) | ரூ.1,500/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.300/–) |
| | | மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை | ரூ.2,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.500/–) | ரூ.1,500/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.300/–) |
| காப்புத் தொகை (Caution Deposit) ரூ.5,000/–<br>மின்கட்டண வைப்புத் தொகை (EB Deposit) - ரூ.3000/– | | | | |
| மின் விநியோகத்திற்கு ஏற்ப வர்த்தக மின் கட்டணம் வசூலிக்கப்படும்.<br>சேவை வரிகள் மற்றும் பராமரிப்பு செலவுகள் தனி. | | | | |

**ஈ. சிறு அரங்கம்**

| அரங்க விவரம் | இருக்கைகள் விவரம் | ஒதுக்கீட்டு நேரம் | வாடகை கட்டணம் | மின் கட்டணம் |
|---|---|---|---|---|
| சிறு அரங்கம் (Mini Hall) | 136 | காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | ரூ.6,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.500/–) | ரூ.3,500/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.300/–) |
| | | காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை | ரூ.3,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.500/–) | ரூ.1,750/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு –ரூ.300/–) |
| | | மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | ரூ.3,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.500/–) | ரூ.1,750/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.300/–) |
| | | மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை | ரூ.3,000/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.500/–) | ரூ.1,750/– (கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.300/–) |
| காப்புத் தொகை (Caution Deposit) ரூ.5,000/–<br>மின்கட்டண வைப்புத் தொகை (EB Deposit) – ரூ.3,000/– | | | | |
| மின் விநியோகத்திற்கு ஏற்ப வர்த்தக மின் கட்டணம் வசூலிக்கப்படும்.<br>சேவை வரிகள் மற்றும் பராமரிப்பு செலவுகள் தனி. | | | | |

**உ. வெளிப்புறப் பகுதி (Verandah)**

| அரங்க விவரம் | பகுதி | உத்தேசிக்கப்பட்டுள்ள மின் கட்டணம் |
|---|---|---|
| Airconditioned | வெளிப்பகுதி (Verandah) | காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை – ரூ.25,000/–<br>(10 மணி நேரம்)<br>(கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு ரூ.2,500/–) |
| மின்கட்டணம் வைப்புத் தொகை ( EB Deposit) – ரூ.25,000/–<br>கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.2,500/– | | |
| Non-Airconditioned | வெளிப்பகுதி (Verandah) | காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை – ரூ.10,000/–<br>(10 மணி நேரம்)<br>(கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1000/–) |
| மின்கட்டணம் வைப்புத் தொகை ( EB Deposit) – ரூ.10,000/–<br>கூடுதல் ஒரு மணி நேரத்திற்கு – ரூ.1,000/– | | |

**<u>நிகழ்ச்சி நடத்துபவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்</u>**

- இந்திய ஜனாதிபதி, பாரதப் பிரதமர், தமிழக முதல்வர், மத்திய மாநில அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கி நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கீடு வழங்கப்படும்.
- மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடத்த செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களின் முன் அனுமதி பெற வேண்டும்.
- எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் கலைவாணர் அரங்கத்தை ஒதுக்கீடு செய்வது அரசின் முடிவுக்கு உட்பட்டதாகும்.
- அரங்க ஒதுக்கீடு தனியார் விழாக்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு 60 நாட்களுக்கு முன்னதாகவும், நாடக சபாக்களுக்கு 40 நாட்களுக்கு முன்னதாகவும் விண்ணப்பம் பெறப்படும். அரசு விழாக்களுக்கு இவ்விதிமுறை பொருந்தாது.
- அரங்கத்திற்கு வாடகையாக செலுத்தப்படும் கட்டணம் **"செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கலைவாணர் அரங்கம், சென்னை"** என்கிற பெயருக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக சென்னையில் மாற்றத் தக்க வகையில், அரங்கம் ஒதுக்கீடு செய்யும் பொழுது வழங்க வேண்டும்.
- முழு வாடகைத் தொகை செலுத்திய பிறகே ஒதுக்கீடு உறுதி செய்யப்படும்.
- இவ்ஒதுக்கீடு தற்காலிகமானது.
- ஒதுக்கீடு செய்யப்படும் நாளன்று அரசு நிகழ்ச்சிகள் நடத்த கோரிக்கைகள் வரப்பெறும் சூழ்நிலையில், தங்களது ஒதுக்கீட்டினை ரத்து செய்ய அரசிற்கு அதிகாரம் உண்டு.
- நிகழ்ச்சிகளை அரசே ரத்து செய்தால் செலுத்திய வாடகை கட்டணம் பிடித்தம் இல்லாமல் அரசின் விதிமுறைப்படி திருப்பி அளிக்கப்படும்.
- ஒதுக்கீடு செய்யப்பட்ட நாள் மற்றும் நேரத்தினை பின்னர் மாற்ற இயலாது.
- அரங்கத்தில் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கீடு கோரி ஆணை பெற்ற பின், ஒதுக்கீடு தேதிக்கு 20 தினங்களுக்கு முன்னால் ரத்து செய்தால் வாடகை தொகையிலிருந்து ரத்துக் கட்டணம் 25% பிடித்தம் செய்யப்படும், 10 தினங்களுக்கு மேல் 20 தினங்களுக்குள் ரத்து செய்தால் 50% பிடித்தம் செய்யப்படும், மூன்று தினங்களுக்கு மேல் 10 தினங்களுக்குள் ரத்து செய்தால் 75% பிடித்தம் செய்யப்படும் மற்றும் 3 தினங்களுக்குள் ரத்து செய்தால் 90% பிடித்தம் செய்யப்படும்.
- அரங்க ஒதுக்கீடு கோரும் நபர் தனது அடையாள அட்டையின் (ஆதார் அட்டை/குடும்ப அட்டை) நகலினை சமர்ப்பிக்க வேண்டும்.
- அரங்க ஒதுக்கீடு அனுமதி வழங்கப்பட்ட நபர் தனது அனுமதியை வேறு நபருக்கு மாற்றம் செய்யக் கூடாது.
- ஒதுக்கீடு கோரிய நிகழ்ச்சி மட்டுமே நடத்த அனுமதிக்கப்படும், கண்டிப்பாக அரசியல், சாதி, சமயம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
- கலைவாணர் அரங்கத்தில் நடத்தப்பட உள்ள நிகழ்ச்சிகள் அரசு பெயருக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நடத்தப்பட வேண்டும்.
- அரங்கத்தில் தூய்மையை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.
- எக்காரணத்தை கொண்டும் கலையரங்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கைக்கு மிகையான நபர்கள் அனுமதிக்க கூடாது.

- அரங்கத்திற்கு உள்ளே எந்த விதமான உணவுப் பொருட்களும் தயாரிப்பதற்கும் அனுமதி கிடையாது.
- நிகழ்ச்சி நடத்துபவர்கள் அரங்கத்தில் உள்ள பொருட்களுக்கு (பல்ப், நாற்காலிகள், பிற பொருட்கள்) சேதமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நிகழ்ச்சி நடத்துபவர்கள் வைப்புத் தொகையாக ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும். இத்தொகை சேதாரம் ஏதேனும் இல்லையென்றால் திருப்பி அளிக்கப்படும்.
- ஒதுக்கீட்டாளர் சுத்தம் செய்யும் கட்டணமாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஒதுக்கீடு கோரும்போது செலுத்த வேண்டும். இத்தொகை திருப்பி அளிக்கப்பட மாட்டாது.
- அரங்கத்தில் உள்ள மின் ஆக்கியை (Generator) பயன்படுத்த ஒரு மணி நேரத்திற்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வாடகையாக செலுத்த வேண்டும். மேலும், நிகழ்ச்சி நடத்துபவரே மின் ஆக்கி பயன்படுத்த தேவைப்படும் டீசல் நிரப்பிக் கொள்ளுதல் வேண்டும்.
- அரங்க ஒதுக்கீடு செய்த நேரத்திற்குள் தங்களுடைய நிகழ்ச்சிகளை முடித்துக் கொள்ள வேண்டும். கூடுதலான நேரத்திற்கு, நிகழ்ச்சிகள் ஏதேனும் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்தால், அதற்குண்டான கூடுதல் மின் கட்டணத் தொகை மணிக்கு ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வீதம் செலுத்த வேண்டும். கூடுதல் மின் கட்டணத்திற்கான தொகை வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்பட்டு மீதத் தொகை திருப்பி அளிக்கப்படும். அடுத்த நிகழ்ச்சிகள் இருந்தால் ஒதுக்கீடு செய்த நேரத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.
- தங்களுக்கு அரங்கம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரங்கத்திற்கு வெளியே வாகனங்கள் நிறுத்துவதற்கு மட்டும் தான் அனுமதிக்கப்படும். அவ்வாறு நிறுத்தப்படும் வாகனங்களுக்கு உரிய மேற்பார்வையாளரை நிகழ்ச்சி நடத்துபவரே நியமித்துக் கொள்ள வேண்டும்.
- அரங்கத்திற்கு வெளியே கூடுதல் வசதிகள் ஏற்படுத்துவதற்கு இயக்குநர் அவர்களிடம் உரிய அனுமதி பெற வேண்டும்.
- அரங்கத்தின் வெளிப்பகுதியில் (verandah) எந்தவிதமான விற்பனை கடைகளும் அமைக்க அனுமதிக்கப்படாது. பொருட்காட்சிகள் நடத்துவதற்கு உரிய அனுமதி பெற வேண்டும். பொருட்காட்சி நடத்திட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாடகை ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) (மின் கட்டணம் தனி) வசூலிக்கப்படும்.
- அரங்க ஒதுக்கீட்டுதாரர் கூடுதலாக தேவைப்படும் ஒலி, ஒளி அமைப்பு மற்றும் மேடையில் கூடுதலான நாற்காலிகளை தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இதற்கு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களின் முன் அனுமதி பெற வேண்டும். ஒலி, ஒளி அமைப்பிற்கான மின் கட்டணம் பயன்பாட்டிற்கு தக்கவாறு வசூலிக்கப்படும்.
- கலைவாணர் அரங்கத்தில் தனியார் நிகழ்ச்சிகள் நடத்தும் பொழுது பாதுகாப்பு கருதியும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் வகையிலும், காவல்துறையின் அனுமதி பெற்று விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- கலைவாணர் அரங்கத்தில் தனியார் நிகழ்ச்சிகள் நடத்தும் பொழுது பாதுகாப்பு கருதி தீயணைப்புத்துறையின் மூலம் தீயணைப்பு வாகனத்தை நிகழ்ச்சி நடத்துபவரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
- கலைவாணர் அரங்கத்தினை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் மேற்பார்வையிலும், அறிவுரையின்படியும் தான் பயன்படுத்த வேண்டும். (கட்டடங்களில் ஆணி அடிப்பது போன்று சேதாரங்கள் நடைபெறக் கூடாது)

- கலைவாணர் அரங்கத்தினை வாடகைக்கு பயன்படுத்தும் நிறுவனங்கள், அதற்கென்று தனியாக ஒரு நிகழ்ச்சிப் பொறுப்பாளரை நியமித்து பணிகளை பார்த்துக் கொள்ளவேண்டும். நிகழ்ச்சிகளின் போது, அரங்கத்திலுள்ள தளவாடப் பொருட்கள் மற்றும் இதரப் பொருட்கள் சேதம் ஏற்படுமாயின் அதற்கான செலவினை மேற்கண்ட நிகழ்ச்சி நடத்தும் பொறுப்பாளர் முழுவதுமாக செலுத்த வேண்டும்.
- மதுபானம் அருந்தி வருபவர்கள் அரங்கத்திற்குள் அனுமதிக்கப் படமாட்டார்கள்.
- அரங்கத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகப்படுத்தக் கூடாது.
- முக்கிய அரசு தலைவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும், இதர முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்.
- அரங்கத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிர்வாகம் எடுக்கும் முடிவே இறுதியானது.
- கலைத்தொழில் சாரா நாடகக் குழுக்கள் (Amateur Drama Troupe), நாடகக் குழுக்கள் (Theatre groups) மற்றும் சபாக்கள் (Sabhas) ஆகியவற்றால் நடத்தப்படும் நாடகங்களுக்கு மேடை அமைப்புக்கான செலவினத்தை நாடகம் நடத்துபவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

# 7. மாநில செய்தி நிலையம், சென்னை – 600 002.

தொலைபேசி: ☏ 044–25333024

மாநில செய்தி நிலையம், சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சுமார் 60,200 புத்தகங்கள் உள்ளன. நாள்தோறும் காலை 10 மணி முதல் 5.45 மணி வரை இயங்கி வருகிறது. இந்நூலகத்தில், வாழ்க்கை வரலாற்று நூல்கள், அறிவியல், சரித்திரம், தத்துவம், புதினங்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் போன்ற பல்வேறு வகைப்படும் புத்தகங்களும், மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம், வணிகவியல், கணக்கு, கணினி போன்ற தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையிலும் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும், குழந்தைகள், பள்ளி, மாணவ மாணவியர், கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது மேற்கோளுக்கு பயன்படும் புத்தகங்களும், நாளிதழ்கள், வார – மாத இதழ்களும் வைக்கப்பட்டுள்ளன. வேலை தேடும் இளைஞர்களது நலனுக்காக வேலைவாய்ப்புச் செய்தி, போட்டித் தேர்வுகளுக்காக தயார் செய்ய உதவும் மேற்கோள் புத்தகங்களும் உள்ளன.

அரசின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இதழ்களும், காலமுறை வெளியீடுகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த கையேடுகளும், வெளியீடுகளும் இங்கு தகவலுக்காக வைக்கப்படுகின்றன.

# 8. தமிழரசு

தொலைபேசி: ☏ 044 – 22542221, 22542224

தமிழ்நாடு அரசின் மாத இதழாக தமிழரசு இதழ் திகழ்கிறது. தமிழரசு இதழ் செய்தி மக்கள் தொடர்புத் துறையால், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாதந்தோறும் வெளியிடப்படுகிறது.

தமிழரசு அச்சகம், தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் சென்னை, தரமணி, இராஜீவ் காந்தி சாலை, கானகம் என்ற முகவரியில் இயங்கி வருகிறது.

தமிழரசு இதழில் தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மக்கள் நலம் சார்ந்த பணிகள் அரசின் கொள்கை முடிவுகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றும் உரைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றும் உரைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு விழாக்களில் பங்கேற்று மக்களுக்காக அர்ப்பணிக்கும் திட்டங்கள் குறித்த நிகழ்ச்சிகளின் தொகுப்புகள், தமிழ்நாடு அரசு வெளியிட்ட நலத்திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் வெற்றிக்கதைகள் மற்றும் மகளிர் நலம், குடும்ப நலம், மருத்துவம், வேளாண்மை போன்ற சமூகநலம் சார்ந்த பொதுக் கட்டுரைகள், சிறுகதைகள் போன்றவைகள் அனைத்து தரப்பினரும் படித்துப் பயன்பெறும் வகையில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

மேலும், தமிழரசால் ஆண்டுதோறும் சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்படுகிறது. அவைகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மற்றும் அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆற்றும் உரைகளின் தொகுப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றும் உரைகள், அறிவிப்புகள், தமிழ்நாடு அரசு அனைத்துத் துறைகளில் நிகழ்த்தும் சாதனைகளை தொகுத்து சாதனை மலராக ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. மேலும், தமிழ்நாடு முழுவதும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறைக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் நினைவகங்களுக்கு, தலைவர்கள் மற்றும் தியாகிகளைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது.

மேலும், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக, தமிழ்நாடு அரசின் முக்கிய தொலைபேசி எண்கள் அடங்கிய சிறு தொலைபேசிக் கையேடுகள் அச்சிட்டு வழங்கப்படுகிறது. இச்சிறு தொலைபேசிக் கையேடு பெற விரும்பும் பொதுமக்கள் ரூ. 15/– செலுத்தி தமிழரசு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், அரசு விழா அழைப்பிதழ்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இதர பிரிவுகளுக்கு தேவைப்படும் விண்ணப்பங்கள், படிவங்கள், சமூகநலன் சார்ந்த சுவரொட்டிகள் ஆகியவை அச்சிட்டு வழங்கப்படுகிறது.

**தமிழரசு சந்தா விவரம்**

**தமிழ்**

| | | |
|---|---|---|
| தனி மாத இதழ் விலை | – | ரூ.20 |
| ஆண்டு சந்தா விலை | – | ரூ.240 |
| ஆயுள் சந்தா விலை | – | ரூ.2,000 (10 ஆண்டுகளுக்கு) |

**ஆங்கிலம்**

| | | |
|---|---|---|
| தனி மாத இதழ் விலை | – | ரூ.20 |
| ஆண்டு சந்தா விலை | – | ரூ.240 |
| ஆயுள் சந்தா விலை | – | ரூ.2,400 (10 ஆண்டுகளுக்கு) |

தமிழரசு இதழ்களைப் பெறுவதற்கு, தமிழரசு அலுவலகம், பிளாக் 5, ராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை – 600 113 என்ற முகவரிக்கு நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ அல்லது அனைத்து மாவட்டங்களிலும் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களின் மூலமாக "துணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு, சென்னை–113" என்ற பெயரில் சந்தாத் தொகையினை வங்கி கேட்பு வரைவோலை, காசோலை மற்றும் பணவிடை மூலமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

தற்போது மாறிவரும் காலச்சூழ்நிலைக்கேற்ப, இளைய தலைமுறையினர், மாணவர்கள் மற்றும் புதிய வாசகர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் **www.tamilarasu.org** என்ற இணையதளம் அறிமுகம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பழைய சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவினை இணையதளத்திலேயே புதுப்பித்துக்கொள்ளலாம்.

# 9. திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் வழங்குதல்

1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு, தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்குப் பின்வரும் விருதுகள் தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த படம் முதல் பரிசு – ரூ.2 இலட்சம் சிறந்த படம் இரண்டாம் பரிசு – ரூ.1 இலட்சம் சிறந்த படம் மூன்றாம் பரிசு – ரூ.75,000/–, சிறந்த படம் சிறப்பு பரிசு ரூ.75,000/– மேலும், பெண்களை வெகு உயர்வாக சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்பு பரிசாக ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் வழங்கப்படுகிறது.

1. சிறந்த நடிகர்
2. சிறந்த நடிகை
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு)
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு)
5. சிறந்த குழந்தை நட்சத்திரம்
6. சிறந்த நகைச்சுவை நடிகர்
7. சிறந்த நகைச்சுவை நடிகை
8. சிறந்த வில்லன் நடிகர்
9. சிறந்த இயக்குநர்
10. சிறந்த கதையாசிரியர்
11. சிறந்த உரையாடலாசிரியர்
12. சிறந்த இசையமைப்பாளர்
13. சிறந்த பாடலாசிரியர்
14. சிறந்த பின்னணிப் பாடகி
15. சிறந்த பின்னணிப் பாடகர்
16. சிறந்த ஒளிப்பதிவாளர்
17. சிறந்த ஒலிப்பதிவாளர்
18. சிறந்த படத்தொகுப்பாளர்
19. சிறந்த கலை இயக்குநர்
20. சிறந்த நடன ஆசிரியர்
21. சிறந்த சண்டைப் பயிற்சியாளர்
22. சிறந்த ஒப்பனைக் கலைஞர்
23. சிறந்த தையற் கலைஞர்
24. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்)
25. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்)
26. சிறந்த குணச்சித்திர நடிகர்
27. சிறந்த குணச்சித்திர நடிகை

விருது பெறுவோர் ஒவ்வொருவருக்கும், 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும். கடந்த 2009 முதல் 2014ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த முழுநீளத் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 131, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.2)த்துறை, நாள் 13.07.2017)

# சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கான விருது பெற நிபந்தனைகள்

| **தகுதிகள்** | **விண்ணப்பிக்கும் முறை** |
|---|---|
| 1. 3,000 மீட்டர் நீளத்திற்குக் குறையாமல் உள்ள 35 மிமீ/சினிமாஸ்கோப் படங்கள் | 1. விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.10 |
| 2. மொழிமாற்றம் செய்யப்பட்ட படங்களும், பிறமொழிப் படங்களும் ஏற்கப்பட மாட்டாது. | 2. திரையீட்டுக் கட்டணம் ரூ.1,000 |
| 3. செய்திப் படங்களும், கல்விப் படங்களும் ஏற்கப்படமாட்டாது. | 3. பதிவுக் கட்டணம் ரூ.100 |
| 4. சம்பந்தப்பட்ட ஆண்டின் ஆரம்பம் முதல் இறுதிக்குள் (காலண்டர் ஆண்டு – ஜன.1 முதல் டிச.31க்குள்) மத்திய தணிக்கைக் குழுவின் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். | முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை:<br><br>**இயக்குநர்,**<br>செய்தி–மக்கள் தொடர்புத்துறை,<br>தலைமைச் செயலகம்,<br>சென்னை–600 009.<br>என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். |

**விருதுக்குரியோருக்கு பரிசு விவரம்:**

முதல் பரிசு : ரூ. 2,00,000 ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்
இரண்டாம் பரிசு : ரூ. 1,00,000 ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்
மூன்றாம் பரிசு : ரூ. 75,000 ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்
சிறப்புப் பரிசு : ரூ. 75,000 ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்

பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம் ஒன்றுக்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

### அளவான குடும்பம், திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம்

முதல் பரிசு : ரூ. 50,000 ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்
இரண்டாம் பரிசு : ரூ. 25,000 ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்
மூன்றாம் பரிசு : ரூ. 10,000 ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்
விருதுகளுக்குரியவர்களை அரசினால் அமைக்கப்படும் குழு தேர்வு செய்யும்.

# கலைத்துறை வித்தகர் விருதுகள்

அறிஞர் அண்ணா விருது, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் விருது, ராஜா சாண்டோ விருது, எம்.ஜி.ஆர். விருது, கவிஞர் கண்ணதாசன் விருது, நடிகர் திலகம் சிவாஜிகணேசன் விருது, தியாகராஜ பாகவதர் விருது மற்றும் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா ஆகிய பெயர்களால் கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் அரசால் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகளை பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்கு தலா 5 பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

**குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம்**

**தகுதிகள்**

1. ஆபாசம், தரக்குறைவு, ஆட்சேபகரம் ஆகியவை காட்சிகளிலோ, வசனங்களிலோ இடம் பெற்றிருத்தல் கூடாது.

2. 3,000 மீட்டருக்குக் குறையாத (35மிமீ/ சினிமாஸ்கோப்) முழுநீளத் திரைப்படம் 8 பிரதிகளுக்குக் குறையாமலும், 25 பிரதிகளுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

3. பிறமொழிகளிலிருந்து மொழிமாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்கள் ஏற்கப்படமாட்டாது.

4. செய்திப்படங்கள், கல்வி குறித்த படங்கள் ஆகியவை ஏற்கப்படமாட்டாது.

5. மத்திய தணிக்கைக் குழுவின் சான்றிதழ் பெற்றிருத்தலோடு, குறிப்பிட்ட ஆண்டு இறுதிக்குள் (டிசம்பர் 31) திரையிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.10

2. திரையீட்டுக் கட்டணம் ரூ.1,000

3. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

4. பதிவுக் கட்டணமாக, இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை அவர்களின் பெயரில் ரூ.100க்கான வங்கி வரைவோலையுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறைந்த செலவிலான, தகுதி பெற்ற, ஒவ்வொரு தமிழ்த் திரைப்படத்திற்கும் அரசு மானியமாக தலா ரூ.7 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. அரசினால் அமைக்கப்படும் தேர்வுக்குழுவின் பரிந்துரையின் பேரில் மானியம் வழங்கப்படும். கடந்த 2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுகளில், குறைந்த செலவில் தயாரித்து வெளியான தரமான 149 தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியமாக, தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடியே 43 இலட்சம் ரூபாய் வழங்கிட, அரசாணை எண் 1, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.2)த்துறை, நாள் 02.01.2018–ல் ஆணை வெளியிடப்பட்டு 20.06.2018 அன்று 149 தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு அரசு மானியம் தலா ரூ.7 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

# சின்னத்திரை விருதுகள்

சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள், குறுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில் சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக 2 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 இலட்சம் ரூபாய் ரொக்கம், நினைவுப் பரிசு உள்ளிட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

1. சிறந்த கதாசிரியர்
2. சிறந்த திரைக்கதை ஆசிரியர்
3. சிறந்த உரையாடல் ஆசிரியர்
4. சிறந்த இயக்குநர்
5. சிறந்த ஒளிப்பதிவாளர்
6. சிறந்த படத் தொகுப்பாளர்
7. சிறந்த கதாநாயகன்
8. சிறந்த கதாநாயகி
9. சிறந்த குணச்சித்திர நடிகர்
10. சிறந்த குணச்சித்திர நடிகை
11. சிறந்த வில்லன் நடிகர்
12. சிறந்த வில்லி நடிகை
13. சிறந்த குழந்தை நட்சத்திரம்
14. சிறந்த பின்னணி இசையமைப்பாளர்
15. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்)
16. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்)
17. சிறந்த தந்திரக் காட்சியாளர்

**<u>தகுதிகள்</u>**

1. ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான காலத்தில் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்ட நெடுந்தொடர் மற்றும் வாரத்தொடர்

2. நெடுந்தொடர் எனில் 130 பகுதிகள் தேர்வுக்குரிய ஆண்டில் ஒளிபரப்பாகி இருக்க வேண்டும்.

3. வாரத்தொடர்கள் எனில் குறைந்தபட்சம் 26 பகுதிகள் தேர்வுக்குரிய ஆண்டில் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகி இருக்க வேண்டும்.

**<u>விண்ணப்பிக்கும் முறை</u>**

1. விண்ணப்பப்படிவத்தின் விலை ரூ.10

2. தொடரின் திரையீட்டு கட்டணம் ரூ2,000

3. பதிவு கட்டணம் ரூ.100

4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை- 600 009 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

எனச் சின்னத்திரைத் துறையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா 3 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் மற்றும் சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்குத் தலா 1 இலட்சம் ரூபாய் ரொக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ள சிறந்த தொடர்கள் மற்றும் சிறந்த கலைஞர்களுக்கான விருதுகள், ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கிட அரசாணை எண் 132, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.2)த்துறை, நாள் 13.07.2017–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## இந்திய சினிமா நூற்றாண்டு விழா மற்றும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதியுதவி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திரைப்பட உலகிற்குப் பெருமை சேர்த்திடும் வகையில், இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான முறையில் நடத்திட ஏதுவாக, இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழ்நாடு அரசின் சார்பில், இவ்விழாவினை நடத்திய தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு 10 கோடி ரூபாய் மானியமாக வழங்கினார்கள். இந்திய சினிமா நூற்றாண்டு விழாவானது, சென்னையில் கடந்த 21.9.2013 முதல் 24.9.2013 வரை வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மற்றும் பிற மாநில முதலமைச்சர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

சென்னையில் பல்வேறு காலக் கட்டங்களில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு தமிழக அரசின் சார்பில் 4 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

- ஒன்பதாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா
  (14.12.2011 முதல் 22.12.2011 வரை) – ரூ.25 இலட்சம் மானியம்.
- பத்தாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா
  (12.12.2012 முதல் 20.12.2012 வரை) – ரூ.50 இலட்சம் மானியம்.
- பதினோராவது சென்னை சர்வதேச திரைப்பட விழா
  (12.12.2013 முதல் 19.12.2013 வரை) – ரூ.50 இலட்சம் மானியம்.
- பன்னிரண்டாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா
  (18.12.2014 முதல் 25.12.2014 வரை) – ரூ.50 இலட்சம் மானியம்.
- பதின்மூன்றாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா
  (06.01.2016 முதல் 13.01.2016 வரை) – ரூ.50 இலட்சம் மானியம்.
- பதினான்காவது சென்னை சர்வதேச திரைப்பட விழா
  (05.01.2017 முதல் 12.01.2017 வரை) – ரூ.50 இலட்சம் மானியம்.
- பதினைந்தாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா
  (14.12.2017 முதல் 21.12.2017 வரை) – ரூ.50 இலட்சம் மானியம்.
- பதினாறாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா
  (13.12.2018 முதல் 20.12.2018 வரை) – ரூ.75 இலட்சம் மானியம்.

# 10. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களில், அவர்களது செயல்முறைத் தேர்வுக்கென தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், ஒளிப்பதிவாளர், ஒலிப்பதிவாளர், படத்தொகுப்பாளர் மற்றும் படம் பதனிடுபவர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு, விருதாக ஒரு பவுன் தங்கப்பதக்கம் மற்றும் ரூ.5,000/– ரொக்கப்பரிசு ஆகியவற்றை வழங்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

விருதுக்குரியவர்களை அரசினால் அமைக்கப்படும் குழு தேர்வு செய்யும்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் 2008–2009ஆம் கல்வி ஆண்டு முதல் 2013 - 2014ஆம் கல்வியாண்டுக்கான எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான விருதுகள் வழங்க அரசாணை எண்.131, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.2)த்துறை, நாள்.13.07.2017இல் வெளியிடப்பட்டுள்ளது.

# 11. எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், தரமணி, சென்னை–113.

**தொலைபேசி : ☏ 044–22542212**

**மாணவர் சேர்க்கை**

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் என்ற பெயர் அரசாணை எண்.436, செய்தி மற்றும் சுற்றுலா (தி.தொ.1)த் துறை, நாள்.16.11.2007–இன்படி, எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்புக்கான பட்டயப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. கீழ்காணும் அரசாணைகளில் பட்டய பயிற்சி வகுப்புகள் பட்டப் படிப்புகளாக (BVA) மாற்றப்பட்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைகழகத்துடன் இணைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

(1) அரசாணை(ப) எண்.106 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.1) த் துறை, நாள்.29.10.2015.

(2) அரசாணை(நிலை) எண்.101 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.1) த் துறை, நாள்.23.06.2016.

**Bachelor of Visual Arts (இளங்கலை – காட்சிக்கலை) பாடப்பிரிவுகள் குறித்த விவரங்கள், தகுதிகள், மாணவர் சேர்க்கை குறித்த விவரங்கள் பின்வருமாறு:**

| வ.எண் | பட்டப்படிப்பு விவரம் (B.V.A Course Details) | காலம் | தகுதி | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | ஒளிப்பதிவு | 4 ஆண்டுகள் | + 2 | 12 + 2 ** |
| 2. | எண்மிய இடைநிலைப் பிரிவு | 4 ஆண்டுகள் | + 2 | 12 + 2 ** |
| 3. | ஒலிப்பதிவு | 4 ஆண்டுகள் | + 2 | 12 + 2 ** |
| 4. | இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல் | 4 ஆண்டுகள் | + 2 | 12 + 2 ** |
| 5. | படத்தொகுப்பு | 4 ஆண்டுகள் | + 2 | 12 + 2 ** |
| 6. | உயிர்பூட்டல் மற்றும் காட்சிப் பயன் | 4 ஆண்டுகள் | + 2 | 12 + 2 ** |

- மேற்கண்ட அனைத்துப் பட்டப் படிப்புகளிலும் ஒரு இடம் வெளி மாநில மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- அனைத்து பட்டப்படிப்புகளிலும் ஒரு இடம், தென்னிந்திய திரைப்பட வர்த்தகசபைத் தலைவர் அவர்களின் பரிந்துரைப்படி, திரைப்படத் துறையைச் சார்ந்த பணியாளர்களின் மகன்/மகளுக்கு வழங்கப்படும்.
- மாணவர் சேர்க்கை, அறிவிப்புகள் மே/ஜூன் மாதங்களில் நாளிதழ்களில் வெளியிடப்படும்.
- மாணவர் சேர்க்கை, ஜூலை/ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறும்.

1. கற்பிப்புக் கட்டணம் – ரூ.15,000 (ஆண்டுக்கு)
2. சிறப்புக் கட்டணம் – ரூ.2,000 (ஆண்டுக்கு)
3. வளர்ச்சிக் கட்டணம் – ரூ.1,000 (ஆண்டுக்கு)
4. பிணையத் தொகை – ரூ.500/– (ஆண்டுக்கு)

**குறிப்பு:** ஆதிதிராவிட மற்றும் பழங்குடி வகுப்பினர்களுக்கு கல்வி கட்டணத்தில் கற்பிப்பு கட்டணம் மட்டும் விலக்களிக்கப்படுகிறது.

# 12. தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, சென்னை – 600 002

## தலைமைத் தயாரிப்பாளர்

தொலைபேசி : ☏ 044 – 25333044

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நலத்திட்டங்கள் தொடர்பான வீடியோ செய்தி மலர்கள் மக்களை சென்றடையும் வகையில் தயாரிக்கப்படுகிறது. அவை திரைப்படங்களாக மாற்றம் செய்யப்பட்டு மைய அரசின் தணிக்கை குழுவிடம் தணிக்கை சான்று பெற்று தலைமைச் செயலகம் ஊடக மையத்திலிருந்து பதிவேற்றம் செய்து ரியல் இமேஜ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், Qube Cinemas, UFO Moviez Pvt. Ltd, Scrabble digital, Prasad Extreme Digital, Onesource Techmedia, Pro visual, Aerox Digital Cinemas ஆகிய தனியார் நிறுவனங்கள் மூலமாக டிஜிட்டல் முறையில் அனைத்து டிஜிட்டல் திரையரங்குகளில் திரைப்படப்பிரிவு வழியாக திரையிடப்பட்டு வருகிறது. மேற்கண்ட வீடியோ செய்தி மலர்கள் தலைமைச் செயலக ஊடக மையத்திலிருந்து பதிவேற்றம் செய்து தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலமாகவும் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் அதிநவீன வீடியோ வாகனங்கள் மூலமாகவும் கள விளம்பரப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

# 13. திரைப்படத்துறையினர் நலவாரியம், சென்னை–2

## உதவி இயக்குநர்

தொலைபேசி : ☏ **044–25333054**

திரைப்படத்துறையினர் நலவாரியம் மூலம் திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரை சார்புடைய தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் உயரிய நோக்கிலும், அவர்கள் வளமுடன் வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்திலும், தமிழ்நாடு அரசு சார்பில், திரைப்படத்துறையினர் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டு, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சீரிய கட்டுப்பாட்டில் சிறப்புடன் செயலாற்றி பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நலவாரியத்தில், 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட / சின்னத்திரைத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேரத் தகுதி பெற்றவர்கள் ஆவர். இந்நலவாரியத்தில் நாளது வரையில் 21,611 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திரைப்படத்துறையின் பல்வேறு சங்கங்களை சார்ந்த உறுப்பினர்களுக்கு கீழ்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித்தொகை |
|---|---|---|
| 1. கல்வி உதவித் தொகை | | |
| அ) | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 ரூபாய் |
| ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண் குழந்தைகளுக்கு | 1,000 ரூபாய் |
| இ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 ரூபாய் |
| | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு ( இரு பாலருக்கும் ) | 1,500 ரூபாய் |
| ஈ) | முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ( இரு பாலருக்கும் ) | 1,500 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,750 ரூபாய் |
| உ) | முறையான பட்ட மேற்படிப்பிற்கு ( இரு பாலருக்கும் ) | 2,000 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு ( இரு பாலருக்கும் ) | 3,000 ரூபாய் |
| ஊ) | தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு ( இரு பாலருக்கும் ) | 2,000 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு ( இரு பாலருக்கும் ) | 4,000 ரூபாய் |

| | | |
|---|---|---|
| ஏ) | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு ( இரு பாலருக்கும் ) | 4,000 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு ( இரு பாலருக்கும் ) | 6,000 ரூபாய் |
| ஏ) | ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பல வகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு ( இரு பாலருக்கும் ) | 1,000 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு ( இரு பாலருக்கும் ) | 1,200 ரூபாய் |
| 2 | திருமண உதவித் தொகை | 2,000 ரூபாய் |
| 3 | மகப்பேறு உதவித் தொகை | 6,000 ரூபாய் |
| 4 | கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித்தொகை | 3,000 ரூபாய் |
| 5 | மூக்குக் கண்ணாடிச் செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 ரூபாய் |
| 6 | விபத்து ஈட்டுறுதித் திட்டம் (அ) விபத்தினால் ஏற்படும் மரணம் | 1 இலட்சம் ரூபாய் |
| | (ஆ) விபத்தினால் ஏற்படும் ஊனம் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1 இலட்சம் ரூபாய் வரை |
| 7 | இயற்கை மரணம் உதவித்தொகை | 15,000 ரூபாய் |
| 8 | ஈமச் சடங்கு உதவித்தொகை | 2,000 ரூபாய் |

திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் உறுப்பினர் / செயலாளராகவும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் செய்யப்பட்டுள்ள பிற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு :

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர், வணிகவரித்துறை ஆணையர், உள்துறைத் துணைச் செயலாளர் (சினிமா), தொழிலாளர் நலத்துறை ஆணையர், நில நிருவாகத்துறை ஆணையர் ஆகிய எட்டு அரசு உயர் அலுவலர்கள் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் ஆவர்.

**அலுவல் சாரா உறுப்பினர்கள்**

திருவாளர்கள் ஆர்.வி.உதயகுமார் (இயக்குநர்), பி.வாசு (இயக்குநர்), லியாகத் அலிகான் (வசன கர்த்தா), மோகன் காந்திராமன் (இயக்குநர்), ராமராஜன் (நடிகர்), டி.கே.கலா ( நடிகை மற்றும் பாடகி), புஷ்பா கந்தசாமி (தயாரிப்பாளர்), நாஞ்சில் பி.சி.அன்பழகன் (இயக்குநர்), செல்வி எல்.ஆர்.ஈஸ்வரி (திரைப்படப் பின்னணிப் பாடகி) ஆகிய திரைத்துறை சார்ந்த வல்லுநர்கள் வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களாக உள்ளனர்.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் இக்குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

# 14. பத்திரிகையாளர் அங்கீகார அட்டை

| தகுதிகள் | விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|
| 1) பத்திரிகையாளராக குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பணிபுரிந்திருத்தல் வேண்டும்.<br><br>2) உழைக்கும் பத்திரிகையாளர் சட்டத்தின் கீழ் முழுநேரப் பணியாளராக இருத்தல் வேண்டும்.<br><br>3) தனியார் தொலைக்காட்சிகளை சார்ந்த நிருபர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பணிபுரிந்திருத்தல் வேண்டும். | விண்ணப்ப மனுவுடன்<br><br>1) முன் அனுபவச் சான்றிதழ்<br>2) பணி நியமனச் சான்றிதழ்<br>3) ஊதியச் சான்றிதழ்<br>4) ஆசிரியரின் பரிந்துரை<br>5) பாஸ்போர்ட் அளவு 2 வண்ணப் புகைப்படங்கள் | 1) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br><br>2) சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். | செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br>தொ.பே. :<br>044–2567 2887 |

சென்னையில், ஒரு நாளிதழுக்கு அதிகபட்சமாக 9 செய்தியாளர்கள் – 2 புகைப்படக்காரர்கள், பிற மாவட்டங்களில் 2 செய்தியாளர்கள், 1 புகைப்படக்காரர், வெளி மாநிலங்களிலிருந்து வெளியாகும் நாளிதழ்களின் 2 பத்திரிகையாளர்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சிகளைச் சார்ந்த 10 செய்தியாளர்கள் / ஒளிப்பதிவாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டை பரிந்துரைக் குழுவின் ஒப்புதல் பெற்று செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், செய்தியாளர் அங்கீகார அட்டை பெறுபவர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் அரசால் அளிக்கப்படுகின்றன.

1) அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணம்.
2) இரயில் பயணங்களில் 50 % கட்டணச் சலுகை.
3) தொலைபேசி இணைப்பு பெற முன்னுரிமை.
4) வீட்டுவசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு ஒதுக்கீடு.
5) அரசு அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளர்களுக்கு சுலபத் தவணையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வீடு / அடுக்குமாடி வீடு ஒதுக்கீட்டில் முன்னுரிமை.

# 15. செய்தியாளர் அட்டை

| தகுதிகள் | விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|
| 1) பருவ இதழ்களின் வெளியீட்டு எண்ணிக்கை குறைந்தபட்சம் 20,000 ஆக இருத்தல் வேண்டும்.<br><br>2) புதிய பருவ இதழ்கள் தொடர்ந்து ஒரு ஆண்டு காலம் வெளிவந்திருக்க வேண்டும்.<br><br>3) விண்ணப்பதாரர் குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.<br><br>4) முழுநேர ஊழியராக இருத்தல் வேண்டும். | விண்ணப்ப மனுவுடன்<br><br>1) அனுபவச் சான்றிதழ்<br>2) பணி நியமனச் சான்றிதழ்<br>3) ஊதியச் சான்றிதழ்<br>4) பத்திரிகையின் விற்பனை குறித்த சான்றிதழ்<br>5) பாஸ்போர்ட் அளவு 2 வண்ணப் புகைப்படங்கள் | 1) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br><br>2) சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9. தொ.பே. : 044–2567 2887 |

ஒவ்வொரு பருவ இதழ் நிறுவனத்திற்கும், 2 செய்தியாளர்கள், 1 புகைப்படக்காரர் என செய்தியாளர் அட்டைகள் செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழுவின் ஒப்புதல் பெற்று வழங்கப்படும்.

# 16. பத்திரிகையாளர் ஓய்வூதியம்

| தகுதிகள் | விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|
| 1) 58 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.<br><br>2) நாளிதழ்/பருவ இதழ் ஆகியவற்றில் முழுநேர ஆசிரியர்/ துணை ஆசிரியர் / செய்தியாளர் / நிருபர்/ புகைப்படக்காரர்/ பிழைதிருத்துபவராக 20 ஆண்டுகள் முழுநேரப் பத்திரிகையாளராகப் பணியாற்றியிருக்க வேண்டும். (ஊனமுற்றிருந்தாலோ அல்லது குணப்படுத்த இயலாத கொடிய நோயினால் பாதிக்கப்பட்டாலோ 10 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால் போதுமானது)<br><br>3) குடும்பத்தின் தற்போதைய வருமானம் ஆண்டுக்கு ரூ.72,000–க்குள் இருக்க வேண்டும்.<br><br>4) பணியிலிருந்து ஓய்வு பெறும்போது மனுதாரர் பணியாற்றிய நிறுவனத்திலிருந்து பெறும் பணிக்கொடை ரூ.3,00,000–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br><br>5) மனுதாரர் பணியிலிருந்தபோது பெற்ற ஆண்டு வருமானம் ரூ.3,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | விண்ணப்ப மனுவுடன்<br>1) வயது குறித்த கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்ற சான்றிதழ்.<br>2) பணியாற்றிய பதவி, நிறுவனம் மற்றும் இடம் தொடர்பான சான்றிதழ்.<br>3) விண்ணப்பதாரர் மத்திய, மாநில அரசின் ஓய்வூதியம் பெற்றிருந்தால் அதற்கான சான்றிதழ்.<br>4) ஊனமுற்றிருந்தாலோ அல்லது குணப்படுத்த இயலாத நோயில் அவதியுற்றாலோ அதற்கான மருத்துவச் சான்றிதழ்.<br>5) பிற சான்றிதழ்கள்<br>அ) பணி ஓய்வு நாள்<br>ஆ) குடும்பத்தின் ஆண்டு வருமானம்<br>இ) பணிக்கொடை<br>ஈ) ஆண்டின் அதிகபட்ச ஊதியம்<br>6) விண்ணப்பதாரரின் 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்<br>7) தனக்குப்பின் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடைய வாழ்க்கை துணையின் விபரங்கள் அடங்கிய படிவம்.<br><br>* பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுவதற்கு 20 ஆண்டுகள் பணி அனுபவச் சான்றிதழ்கள் பெற முடியாதவர்கள், அதற்கு ஈடாக பின்வரும் ஆவணங்களை, 20 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணிபுரிந்ததைத் தெரிவிக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 1) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br><br>2) சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். | செயலாளர்,<br>தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை,<br>தலைமைச் செயலகம்,<br>சென்னை– 9.<br>தொ.பே. :<br>044–2567 2887 |

| | | | |
|---|---|---|---|
| | * பணி நியமன ஆணை<br>* பத்திரிகையாளர் அங்கீகார அட்டை<br>* செய்தியாளர் அட்டை<br>* மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்படும் அடையாள அட்டை<br>* பணியாற்றிய நிறுவனத்தில் இருந்து பாராட்டுச் சான்றிதழ்<br>* தொழிலாளர் சேம நல நிதியத்திற்கு ஆண்டுதோறும் தொகை செலுத்தப்பட்டதற்கான ரசீது. | | |

இத்திட்டத்தின் கீழ், வறுமையில் வாடும், ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு ரூபாய் 10,000 மாதாந்திர ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

# 17. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

| தகுதிகள் | விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|
| ஓய்வூதியம் பெற்ற பத்திரிகையாளர் மறைவிற்குப் பின்னர் அவரது மனைவி/கணவன் உயிரோடிருப்பின் வழங்கப்படுகிறது. | விண்ணப்ப மனுவுடன்<br>1) பத்திரிகையாளர் இறப்புச் சான்றிதழ்<br>2) வாரிசுச் சான்றிதழ்<br>3) இரண்டு பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படங்கள் | 1) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br>2) சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். | செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9. தொ.பே.: 044–2567 2887 |

இத்திட்டத்தின் கீழ், ஓய்வூதியம் பெற்று மறைந்த பத்திரிகையாளரின் மனைவி / கணவனுக்கு ரூபாய் 5,000 மாதாந்திர குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

# 18. பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதித் திட்டம்

| தகுதிகள் | விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|
| தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் நாளிதழ் / பருவ இதழ்களில் ஆசிரியர்/துணை ஆசிரியர்/ செய்தியாளர் / புகைப்படக்காரர் பதவிகளில் முழுநேரப் பணியாளராக பணியிலிருக்கும் போது இறக்க நேரிடுபவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.<br><br>20 ஆண்டுகள் பணிபுரிந்தவராயின், ரூபாய் 3 இலட்சமும், 15 ஆண்டுகள் பணிபுரிந்தவராயின் ரூபாய் 2.25 இலட்சமும், 10 ஆண்டுகள் பணிபுரிந்தவராயின் ரூபாய் 1.50 இலட்சமும், 5 ஆண்டுகள் பணிபுரிந்தவராயின் ரூபாய் 75,000 வழங்கப்படும். | விண்ணப்ப மனுவுடன்<br>1) இறப்புச் சான்றிதழ்<br>2) வாரிசுச் சான்றிதழ்<br>3) பணியாற்றிய நிறுவனம் பதவி மற்றும் முழுநேரப் பணியாளருக்கானப் பணிச் சான்றிதழ்<br>4) இறந்த பத்திரிகையாளரின் 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்<br>5) இருப்பிடச் சான்றிதழ்<br>6) அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர் சங்கம் ஏதாவது ஒன்றிலிருந்து பரிந்துரை "பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி பெறுவதற்குத் தேவைப்படும் அனுபவச் சான்றிதழ் பெற முடியாதவர்கள், அதற்கு ஈடாக, தொடர்ந்து பணிபுரிந்தமைக்கு பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்"<br>• காலஞ்சென்ற பத்திரிகையாளரின் பணி நியமன ஆணை<br>• பத்திரிகையாளர் அங்கீகார அட்டை<br>• செய்தியாளர் அட்டை<br>• மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை<br>• பணியாற்றிய நிறுவனத்திலிருந்து பாராட்டுச் சான்றிதழ்<br>• தொழிலாளர் சேம நல நிதியத்திற்கு ஆண்டுதோறும் தொகை செலுத்தப்பட்டதற்கான ரசீது. | 1) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br><br>2) சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். | செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br>தொ.பே.:<br>044–2567 2887 |

இத்திட்டத்தின்படி, தகுதியானவர்களுக்கு, குடும்ப உதவிநிதி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும்.

# 19. பத்திரிகையாளர் நல நிதியம்

| தகுதிகள் | விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|
| 1) மனுதாரர் முழுநேரம் உழைக்கும் பத்திரிகையாளராக பணிபுரிய வேண்டும்.<br>2) குறைந்தது 5 வருட பணி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>3) மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள ஒரு மாதத்திற்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும்.<br>4) மருத்துவ சிகிச்சை முடிந்த பிறகு அசல் பட்டியல்களுடன், மருத்துவ சிகிச்சை முடிந்த அறிக்கை அனுப்பி வைக்க வேண்டும்.<br>5) பத்திரிகையாளர்கள் மருத்துவ உதவி நிதி பெறுவதற்கு ஆண்டு வருமானம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.<br>6) அரசு ஓய்வூதியம் பெற்று வரும் பத்திரிகையாளர்களுக்கு அதிகபட்ச மருத்துவ உதவி நிதியில் 50 சதவிகிதம் வழங்கப்படும்.<br>7) மருத்துவமனைகள்/ சிகிச்சைகள் குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் தமிழ்நாடு மாநில நோயாளர் அமைப்பு அவ்வப்போது வெளியிடும் அரசாணைகளின்படி பின்பற்றப்படும்.<br>8) நோயின் தன்மை மற்றும் சிகிச்சைக்கேற்ப அதிகபட்ச மருத்துவ உதவி நிதி ரூ.1,00,000/– பத்திரிகையாளர் நல நிதிய பரிந்துரைக்குழுவின் முடிவின்படி வழங்கப்படும். | விண்ணப்ப மனுவுடன்<br>1) பணிச் சான்றிதழ் / ஓய்வூதியம் பெறுவதற்கு ஆணையிடப்பட்ட அரசாணையின் நகல் (ஓய்வூதியம் பெறுபவராக இருந்தால் மட்டும்)<br>2) வருமானச் சான்றிதழ்<br>3) அனுபவ சான்றிதழ்<br>4) இருப்பிட சான்றாக குடும்ப அட்டையின் நகல் / வாக்காளர் அடையாள அட்டை<br>5) இரண்டு புகைப்படங்கள்<br>6) மனுதாரர் எந்த நோயல் பாதிக்கப்பட்டுள்ளார்/ அவருக்கு எத்தகைய சிகிச்சை / அறுவை சிகிச்சை தேவை என்பது பற்றியும் அங்கீகாரம் பெற்ற மருத்துவமனை சார்ந்த மருத்துவரின் தோராய மதிப்பீட்டு (Tentative cost of the surgery) சான்றினை மருத்துவமனையின் முத்திரையுடன் பெற்று (Round seal of the Hospital) மனுவுடன் இணைக்கப்பட வேண்டும். | 1) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br>2) சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். | செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.<br>தொ.பே.:<br>044–2567 2887 |

மேற்கண்ட அனைத்து பத்திரிகையாளர் நலத் திட்டங்களுக்கான விண்ணப்பப் படிவங்களையும் www.tndipr.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# 20.  அரசு விளம்பரங்கள்

அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் அனைத்து விளம்பரங்கள் வெளியிடுவது மையப்படுத்தப்பட்டு, நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் செய்தி மக்கள் தொடர்புத்துறை வழியாக வெளியிடப்படுகின்றன.

பெருமளவில் விற்பனையாகும் பத்திரிகைகளுக்கு மட்டுமின்றி சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளித்து அவை ஊக்குவிக்கப்படுகின்றன.

விளம்பரத்தின் தன்மை, அவை சென்றடைய வேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் தன்மைக்கேற்ப அரசு விளம்பரங்களை வெளியிட பத்திரிகைகள் தேர்வு செய்யப்படுகின்றன.

## ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மத்திய அரசின் தேசிய தகவல் மையத்தின் வழியாக தமிழக அரசின் **www.tn.gov.in** என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுகின்றன.

## மாநில / மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விளம்பர அறிவிப்புகள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் விவரங்கள் ஆகியவை அடங்கிய மாநில / மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் 13.10.2000 முதல் வெளியிடப்படுகின்றன.  தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநரை பதிப்பாளராகக் கொண்டு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் வெளிவருகிறது.  மாவட்டங்களில், அந்தந்த மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களை பதிப்பாளராகக் கொண்டு மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வெளிவருகின்றன. இந்த செய்தி மலர்கள் வாரந்தோறும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் வெளியிடப்படுகின்றன.

ரூ.25 இலட்சத்திற்கு மேல் மதிப்புடைய பொருள்கள் கொள்முதல் செய்தல் மற்றும் ரூ.50 இலட்சத்திற்கு மேல் மதிப்புடைய பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விளம்பரங்கள், அது தொடர்பான முடிவுகள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிடப்படுகின்றன. ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.25 இலட்சம் வரை மதிப்புடைய பொருட்கள் கொள்முதல் செய்தல் மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.50 இலட்சம் வரை மதிப்புள்ள பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விளம்பரங்கள், அது தொடர்பான முடிவுகள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்களில் வெளியிடப்படுகின்றன.

மாநில/மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்களில் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விளம்பரங்களையும், முடிவுகளையும் வெளியிடும் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் செய்தி மலர்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.  தனி நபர்கள், நிறுவனங்கள் ஆண்டு சந்தா தொகை ரூ.2,000/– செலுத்தி மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரையும், ஆண்டு சந்தா தொகை ரூ.1,200/– செலுத்தி, மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரையும் பெற்றுக்கொள்ளலாம்.

# 21. கள விளம்பரம்

தமிழ்நாட்டின் குக்கிராமங்களில் உள்ள மக்களும் தமிழக அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் வாயிலாக செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் வாயிலாக மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்துவதற்காகவும் கள விளம்பர பிரிவு 2013 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இப்பிரிவு சிறப்பாக செயல்படுவதற்காக 32 புதிய மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள் வாங்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வீடியோ வாகனங்கள் மக்கள் கூடும் இடங்களிலும், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களிலும், அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

மேலும், பொதுமக்கள் அதிக அளவில் வந்து செல்லும் இடங்களான 32 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், 3 வட்டாட்சியர் அலுவலகங்கள், புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் மின்னணு திரை (LED Screen) நிறுவப்பட்டு அரசின் சாதனைகள், திட்டங்கள் குறித்த குறும்படங்கள் தொடர்ந்து திரையிடப்பட்டு கள விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# 22. பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்கள் குறித்து, அனைத்துத்தரப்பு மக்களும் அறிந்து கொள்ளச் செய்கின்ற அரிய பணியினை, அரசு சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகள் நிறைவேற்றி வருகின்றன.

கிராமம் மற்றும் நகர்புற மக்கள் அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களைக் கண்டு களித்து, மனநிறைவுடன் தங்களது இல்லத்திற்குச் செல்வதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இவ்வாறு அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும், மறைமுகமாகவும், பலருக்கு வேலை வாய்ப்பை அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம் பெறும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கு ரூ.5,000/– வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், பத்து அரசுப் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. மதுரை, கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் மற்றும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில், சுழற்சி முறையில், 4 மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

**தனியார் பொருட்காட்சிகள்**

முற்றிலும் வணிக நோக்குடன், வரைமுறைகளின்றி தனியாரால் நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள், முழுமையாக முறைப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படும் வகையில் உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் தனியார் பொருட்காட்சிகள் முறையாக நடத்தப்பட, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், செய்தி மக்கள் தொடர்புத் துறை வாயிலாக அனுமதி வழங்கப்படுகிறது.

**புதுடெல்லி மலர்ப்பேரணி**

இந்தியத் துணைக்கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில், தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது.

**குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்**

சென்னை மற்றும் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பங்கேற்பதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்த செய்தித்துறையின் சார்பில் தனி அலங்கார ஊர்தி அமைப்பதுடன், அரசின் பல துறைகளின் சார்பிலான அலங்கார ஊர்திகள் வடிவமைப்பு மற்றும் அணிவகுப்பு ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் முக்கியப் பணிகளாகும்.

**அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி, சென்னை**

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும், அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தகப் பொருட்காட்சியில், செய்தித் துறையின் சார்பில், பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்ற வகையில், அரசின் கொள்கைகள், நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கப்படங்கள் மற்றும் காட்சி மாதிரிகளுடன் தனி அரங்கு அமைக்கப்படுகிறது.

**புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி**

புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாட்டின் சார்பில், இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று, தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்கள் வாயிலாக, வெளிக்கொணரப்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில் நடைபெறும் இப்பொருட்காட்சியில், அனைத்து மாநிலங்களும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளைக் குறிப்பாக, மக்கள் நல்வாழ்வு, உயர்கல்வி, ஊரகவளர்ச்சி ஆகிய துறைகளின் திட்டங்கள் மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதை அங்கீகரிக்கும் வகையில், மத்திய அரசால் விருதுகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதை அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருள்களுக்குச் சந்தையும் ஏற்படுத்தப்படுகிறது. மேலும், இப்பொருட்காட்சிகள் வாயிலாக, பெரும்பான்மையோருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கவும் வழி வகை செய்யப்படுகிறது.

**ஒன்றியங்களில் கண்காட்சிகள்**

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் உள்ள, ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சாதனையை விளக்கும் வகையில், சிறு கண்காட்சியினை நடத்த, தமிழ்நாடு அரசு ஆணையிட்டவாறு, ஊராட்சி ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**புகைப்படக் கண்காட்சி**

மாவட்டங்கள் தோறும் திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் குறித்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களிலும், அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சிகளை, ஆண்டுதோறும் மாவட்டத் தலைநகரங்களில் நடத்த, தமிழ்நாடு அரசு ஆணையிட்டவாறு, ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

# 23. அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட, தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது தியாகங்களையும், அருமை பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச் செய்திடும் நோக்கோடும், அவர்களது பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவுநாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரில் தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாளின் போது அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு தமிழக அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும் சிலைகளுக்கு அருகே அமைக்கப்படும் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செய்யப்படுகின்றது.

| வ. எண் | தேதி | சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள் |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா |
| 5 | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 17 | சுதந்திரப்போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |
| 7 | ஏப்ரல் 19 | கற்புக்கரசி கண்ணகி சித்திரை முழு நிலவு நாள் |
| 8 | ஏப்ரல் 27 | சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் விழா |
| 9 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |
| 10 | ஜூன் 5 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |
| 11 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா |
| 12 | ஜூன் 26 | ம.பொ.சிவஞானம் பிறந்த நாள் விழா |
| 13 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா |
| 14 | ஜூலை 11 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா |
| 15 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா |
| 16 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 17 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி சங்கரலிங்கனார் |
| 18 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி செண்பகராமன் |
| 19 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழா |
| 20 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |

| வ. எண் | தேதி | சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள் |
|---|---|---|
| 21 | செப்டம்பர் 16 | ராமசாமி படையாச்சி பிறந்த நாள் விழா |
| 22 | செப்டம்பர்17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |
| 23 | செப்டம்பர் 27 | டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள் விழா |
| 24 | செப்டம்பர் 29 | முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழா |
| 25 | அக்டோபர் 1 | சிவாஜி கணேசன் பிறந்த நாள் விழா |
| 26 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா |
| 27 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா |
| 28 | நவம்பர் 8 | தமிழ் அறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா |
| 29 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா |
| 30 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 31 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 32 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |

**மாவட்டங்களில் உள்ள தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2. | ஜனவரி 15 | ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள் விழா | லோயர் கேம்ப், தேனி மாவட்டம் |
| 3. | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பிறந்த நாள் விழா | டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடம், காமராஜர் சாலை, சென்னை மாவட்டம் |
| 4. | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பிறந்த நாள் விழா | சேலம் மாவட்டம் |
| 5. | தை மாதம் 5ஆம் தேதி | காலிங்கராயன் அவர்கள் ராஜவாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்பணித்த நாள் நினைவாக விழா | காலிங்கராயன் அணைக்கட்டு, ஈரோடு மாவட்டம் |
| 6. | ஜனவரி 26 | தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 7. | பிப்ரவரி 1 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள் விழா | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 8. | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயபாவணர் பிறந்த நாள் விழா | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 9. | பிப்ரவரி 8 (தைப்பூசத் திருநாள்) | திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா | மதுரை மாநகர், மதுரை மாவட்டம் |
| 10. | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் விழா | இராயபுரம் மணிமண்டபம், சென்னை மாவட்டம் |
| 11. | பிப்ரவரி 19 | தமிழ்த்தாத்தா உ.வே.சா பிறந்த நாள் விழா | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 12. | பிப்ரவரி 22 | தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா | தில்லையாடி,<br>நாகப்பட்டினம் மாவட்டம் |
| 13. | பிப்ரவரி 24 | புரட்சித் தலைவி<br>செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழா | சேலம்,<br>சேலம் மாவட்டம் |
| 14. | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி<br>பிறந்த நாள் விழா | இராமநாதபுரம்,<br>இராமநாதபுரம் மாவட்டம் |
| 15. | ஏப்ரல் 2 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள் விழா | வரகனேரி,<br>திருச்சி மாநகர், திருச்சி மாவட்டம் |
| 16. | ஏப்ரல் 10 | தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள் விழா | திருத்துறைப்பூண்டி,<br>திருவாரூர் மாவட்டம் |
| 17. | ஏப்ரல் 13 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை,<br>தஞ்சாவூர் மாவட்டம் |
| 18. | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கனார் பிறந்த நாள் விழா | கவர்ணகிரி,<br>தூத்துக்குடி மாவட்டம் |
| 19. | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா | ஓடாநிலை, அரச்சலூர்,<br>ஈரோடு மாவட்டம் |
| 20. | ஏப்ரல் 19<br>(சித்ரா<br>பௌர்ணமி) | வள்ளல் அதியமான் பிறந்த நாள் விழா | அதியமான் கோட்டை,<br>தருமபுரி மாவட்டம் |
| 21. | மே 7 | இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள் விழா | இடையன்குடி,<br>திருநெல்வேலி மாவட்டம் |
| 22. | மே 10<br>(சித்திரை<br>இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன்<br>பிறந்த நாள் விழா | கயத்தாறு,<br>தூத்துக்குடி மாவட்டம் |
| 23. | மே 10<br>(சித்திரை<br>இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி,<br>தூத்துக்குடி மாவட்டம் |
| 24. | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சி மாநகரம்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 25. | மே 31 | சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் நினைவு நாள் | வல்லநாடு,<br>தூத்துக்குடி மாவட்டம் |
| 26. | ஜூன் 12 | மார்ஷல் நேசமணி  பிறந்த நாள் விழா | நாகர்கோவில்,<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 27. | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம்,<br>மதுரை மாவட்டம் |
| 28. | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில் தும்பைப்பட்டி,<br>மதுரை மாவட்டம் |
| 29. | ஜூன் 24 | கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் விழா | காரைக்குடி,<br>சிவகங்கை மாவட்டம் |
| 30. | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர்<br>பிறந்த நாள் விழா | விளாச்சேரி,<br>மதுரை மாவட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 31. | ஜூலை 11 | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழா | கட்டாலங்குளம்,<br>தூத்துக்குடி மாவட்டம் |
| 32. | ஜூலை 11 | தவத்திரு குன்றக்குடி அடிகளார்<br>பிறந்த நாள் விழா | குன்றக்குடி,<br>சிவகங்கை மாவட்டம் |
| 33. | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர்<br>பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி,<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 34. | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர்<br>பிறந்த நாள் விழா | விருதுநகர்,<br>விருதுநகர் மாவட்டம் |
| 35. | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர்<br>பிறந்த நாள் விழா | திருமலை சாலை, தியாகராயர்<br>நகர், சென்னை மாவட்டம் |
| 36. | ஜூலை 17 | தியாகி வாஞ்சிநாதன் தியாகிகள் தினம் | செங்கோட்டை,<br>திருநெல்வேலி மாவட்டம் |
| 37. | ஜூலை 31 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர்<br>பிறந்த நாள் விழா | நாகர்கோவில்,<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 38. | ஆகஸ்ட் 2<br>மற்றும் 3 | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை,<br>நாமக்கல் மாவட்டம். |
| 39. | ஆகஸ்ட் 3<br>(ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர்,<br>ஈரோடு மாவட்டம். |
| 40. | ஆகஸ்ட் 3<br>(ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | நினைவுச்சின்னம், சங்ககிரி ,<br>சேலம் மாவட்டம் |
| 41. | ஆகஸ்ட் 20 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன்<br>நினைவு நாள் | பாளையங்கோட்டை,<br>திருநெல்வேலி மாவட்டம் |
| 42. | ஆகஸ்ட் 21 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம்<br>பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி<br>மாவட்டம் |
| 43. | செப்டம்பர் 2<br>(ஆவணி 16) | விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன்<br>பிறந்த நாள் விழா | நெற்கட்டும் செவல்,<br>திருநெல்வேலி மாவட்டம் |
| 44. | செப்டம்பர் 5 | கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார்<br>பிறந்த நாள் விழா | ஒட்டப்பிடாரம்,<br>தூத்துக்குடி மாவட்டம் |
| 45. | செப்டம்பர் 5 | கப்பலோட்டியத் தமிழன்<br>வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | திருநெல்வேலி மாநகர்,<br>திருநெல்வேலி மாவட்டம் |
| 46. | செப்டம்பர் 5 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர்<br>நினைவு நாள் | விருப்பாச்சி, திண்டுக்கல்<br>மாவட்டம் |
| 47. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா<br>பிறந்த நாள் விழா | அண்ணா நினைவிடம், காமராஜர்<br>சாலை, சென்னை மாவட்டம் |
| 48. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா<br>பிறந்த நாள் விழா | காஞ்சிபுரம்,<br>காஞ்சிபுரம் மாவட்டம் |
| 49. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு மாநகர், ஈரோடு மாவட்டம் |
| 50. | செப்டம்பர்17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு மாநகர், ஈரோடு மாவட்டம் |
| 51. | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | வைக்கம், கேரள மாநிலம் |
| 52. | செப்டம்பர் 25 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை<br>நாராயணகவி பிறந்த நாள் விழா | உடுமலைப்பேட்டை,<br>திருப்பூர் மாவட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 53. | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி,<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 54. | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள். |
| 55. | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி,<br>தருமபுரி மாவட்டம் |
| 56. | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | திருப்பூர்,<br>திருப்பூர் மாவட்டம் |
| 57. | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | சென்னிமலை,<br>ஈரோடு மாவட்டம் |
| 58. | அக்டோபர் 9 | பெரியவர் எம்.பக்தவத்சலம் பிறந்த நாள் விழா | காந்தி மண்டபம்,<br>சென்னை மாவட்டம் |
| 59. | அக்டோபர் 10 | நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை பிறந்த நாள் விழா | நாமக்கல்,<br>நாமக்கல் மாவட்டம் |
| 60. | அக்டோபர் 23 | அமுதகவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழா | எட்டயபுரம்,<br>தூத்துக்குடி மாவட்டம் |
| 61. | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர்,<br>சிவகங்கை மாவட்டம் |
| 62. | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன்,<br>இராமநாதபுரம் மாவட்டம் |
| 63. | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைத்த நாள் மார்ஷல் நேசமணி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தல் | நாகர்கோவில்,<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 64. | நவம்பர் 11 | சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் பிறந்த நாள் விழா | இராயபுரம் மணிமண்டபம்,<br>சென்னை மாவட்டம் |
| 65. | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி,<br>கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 66. | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | மணிமண்டபம்,<br>தூத்துக்குடி மாவட்டம் |
| 67. | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | பாரதியார் நினைவு இல்லம்,<br>திருவல்லிக்கேணி,<br>சென்னை மாவட்டம் |
| 68. | டிசம்பர் 12 | அதங்கோட்டாசான் விழா | அதங்கோடு,<br>கன்னியாகுமரி மாவட்டம் |

# 24. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் அரசின் புதிய அறிவிப்புகளை பயனாளிகளான பொதுமக்களுக்கு, செய்தி இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் பணியினை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செம்மையுறச் செயல்படுத்தி வருகின்றன.

மேற்கண்ட பணிகளுக்காக 32 மாவட்டங்களிலும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடைய முகவரியும் தொலைபேசி எண்களும்**

| மாவட்டம் | அலுவலகம் |
|---|---|
| **அரியலூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>ஜெயம்கொண்டம் சாலை,<br>அரியலூர்–621 704 | 04329–228115<br>செல் : 9498042421 |
| **சென்னை**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>சென்னை–600 001. | 044–25268103<br>செல் : 9498042422 |
| **கோயம்புத்தூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>கோயம்புத்தூர்–641 018. | 0422–2301060<br>செல் : 9498042423 |
| **கடலூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>கடலூர்–607 001. | 04142–233887<br>செல் : 9498042425 |
| **தருமபுரி**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>தருமபுரி –636 705. | 04342–230052<br>செல் : 9498042426 |
| **திண்டுக்கல்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திண்டுக்கல் –624 004. | 0451–2460093<br>செல் : 9498042427 |

| | |
|---|---|
| **ஈரோடு**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>ஈரோடு – 638 001. | 0424–2266266<br>செல் : 9498042428 |
| **காஞ்சிபுரம்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>காஞ்சிபுரம் – 631 501. | 044–27237919<br>செல் : 9498042429 |
| **கன்னியாகுமரி**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>கன்னியாகுமரி – 629 001. | 04652–279262<br>செல் : 9498042430 |
| **கரூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>பாலையம் சாலை<br>கரூர் – 639 005. | 04324–257142<br>செல் : 9498042431 |
| **கிருஷ்ணகிரி**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>கிருஷ்ணகிரி – 635 001. | 04343–238777<br>செல் : 9498042433 |
| **மதுரை**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>மதுரை – 625 020. | 0452–2532066<br>செல் : 9498042434 |
| **நாகப்பட்டிணம்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>நாகப்பட்டிணம் – 611 003. | 04365–253040<br>செல் : 9498042435 |
| **நாமக்கல்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>நாமக்கல் – 637 003. | 04286–281011<br>செல் : 9498042436 |
| **பெரம்பலூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>பெரம்பலூர் – 621 212. | 04328–224749<br>செல் : 9498042437 |
| **புதுக்கோட்டை**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>புதுக்கோட்டை – 622 001. | 04322–221454<br>செல் : 9498042438 |

| | |
|---|---|
| **இராமநாதபுரம்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>இராமநாதபுரம் – 623 503. | 04567–230034<br>செல் : 9498042439 |
| **சேலம்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>சேலம் – 636 001. | 0427–2421077<br>செல் : 9498042440 |
| **சிவகங்கை**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>சிவகங்கை – 630 561. | 04575–240370<br>செல் : 9498042441 |
| **தஞ்சாவூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>நீதிமன்ற சாலை<br>தஞ்சாவூர் – 631 001. | 04362–230843<br>செல் : 9498042442 |
| **தேனி**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>மதுரை சாலை<br>தேனி – 625 531. | 04546–251997<br>செல் : 9498042443 |
| **நீலகிரி**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>உதகமண்டலம்<br>நீலகிரி – 643 001. | 0423–2443820<br>செல் : 9498042445 |
| **திருவள்ளூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருவள்ளூர் – 602 001. | 044–27662865<br>செல் : 9498042449 |
| **திருவாரூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருவாரூர். | 04366–221352<br>செல் : 9498042451 |
| **திருச்சிராப்பள்ளி**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருச்சி – 620 001. | 0431–2460351<br>செல் : 9498042446 |
| **திருநெல்வேலி**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருநெல்வேலி– 627 009. | 0462–2500455<br>செல் : 9498042447 |

| | |
|---|---|
| **திருப்பூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருப்பூர் – 641 604. | 0421–2971117<br>செல் : 9498042448 |
| **திருவண்ணாமலை**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருவண்ணாமலை – 606 604. | 04175–232194<br>செல் : 9498042450 |
| **தூத்துக்குடி**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>கோரம்பள்ளம்,<br>தூத்துக்குடி – 628 101. | 0461–2340571<br>செல் : 9498042452 |
| **வேலூர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>வேலூர் – 632 001.<br>மேலாளர்<br>அண்ணா கலையரங்கம், வேலூர். | 0416–2252633<br>செல் : 9498042453<br>0416–2221326 |
| **விழுப்புரம்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>விழுப்புரம் – 605 602. | 04146–223660<br>செல் : 9498042454 |
| **விருதுநகர்**<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>விருதுநகர் – 626 002. | 04562–252028<br>செல் : 9498042455 |

# 25. தகவல் வழங்கும் அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் | : | துணை இயக்குநர் (செய்தி) மற்றும்<br>பொது தகவல் அலுவலர்<br>செய்தி மக்கள் தொடர்புத் துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை–600 009<br>தொலைபேசி எண் 044 – 25676336 |
| உதவி பொதுத் தகவல் அலுவலர் | : | தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களில் உள்ள<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும்<br>செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ்<br>சென்னையில் உள்ள 8 அலகு அலுவலகங்களின்<br>தலைமை அலுவலர்கள் |
| மேல் முறையீட்டு அலுவலர் | : | இணை இயக்குநர் (நினைவகங்கள்)<br>மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்<br>செய்தி மக்கள் தொடர்புத் துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை–600 009<br>தொலைபேசி எண் 044 – 25676226 |